1974 சனவரி 23]

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, இந்தப் பணிகளை சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவதற்கான முறையீடுகள் ஏதேனும் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கேள்வி கேட்டிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் முறையீடுகள் அரசுக்கு வரவில்லை.

திரு. ஜார்ஜ் கோமகன்: தலைவரவர்களே, இப்போது இச் சங்கங்களிலே உள்ள நிலையை மாற்றி சலவைத் தொழிலை மின்சாரத்தின் உபயோகத்தாலேயே செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அப்படிச் செய்தால், தொழிலாளர்களுடைய கதி என்னவாகும் என்று எதிர்பார்க்க முடியாது.

Idols Theft.

@ *13. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether idols of the Arulmigu Abirameswarar Temple at Tiruvamathur near Villupuram were stolen about the 14th February 1973; and

(*b*) if so, the action taken thereon?

சிலைகள் திருட்டு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விழுப்புரத்திற்கு அண்மையில், திருவாமாத்தூரிலுள்ள அருள்மிகு அபிராமேஸ்வரர் கோயிலின் சுவாமி சிலைகள் 1973 பிப்ரவரி 14-ஆம் நாள் அளவில் திருடு போய்விட்டனவா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

@ 19—1—1974-ம் தேதி வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இரண்டு சிலைகள் 12—2—1973 அன்று இரவு திருடப்பட்டுள்ளன.

(இ) காவல் துறையினரிடம் இதுபற்றி 13—2—1973-ல் முறையிடப்பட்டு கிரைம் எண். 46/73-ல் 380, 457 இ.பி.கோ. பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. தடயங்களோ விவரங்களோ கிடைக்கப் பெறாததால் இவ்வழக்கு கண்டு பிடிக்க முடியாததெனக் கருதி 17—5—1973ல் முடிக்கப் பெற்றது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இப்படித் திருடப்பட்ட சிலைகள் எந்தக்காலத்திய சிலைகள், அவை எவ்வளவு விலை பெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தச் சிலைகள் எப்போது செய்யப்பட்டவை என்ற விவரம் இல்லை. அவற்றின் மதிப்பு சுமார் ரூபாய் 5,000 ஆகும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இப்படி இந்தச் சிலைகளைத் திருடியவர்கள் அவற்றை வறுமை காரணமாகத் திருடினார்களா அல்லது வேறு வியாபார நோக்கத்தோடு அல்லது கொள்ளை அடிக்கும் நோக்கத்தோடு திருடினார்களா? வறுமையின் காரணமாக அவற்றைத் திருடியிருந்தால், அரசு அதை ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அது திருடியவர்களுடைய எண்ணத்தைப் பொருத்ததாகும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, கோவில்களில் பூஜைக்குரிய சிலைகளைத் திருடி விற்பதை பாரதியே கண்டித்திருக்கிறார். வறுமை காரணமாகத் திருடலாம் என்று திரு. முத்துசாமி அவர்கள் சொல்லுகின்றார்களே, வறுமை காரணமாகப் பள்ளிகூடத்திலுள்ள மேசை நாற்காலிகளைத் திருடலாம் என்பது திரு. முத்துசாமி அவர்களுக்கு உடன்பாடா?

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, சிலை திருடுகின்றவர்கள் வறுமையால் சில நேரங்களிலே இப்படிச் செய்து விடுகின்றார்கள் என்பது உண்மையா என்றுதான் கேட்டேன். அதற்காக பள்ளியிலும் திருடுவது போன்ற ஒரு கேள்வி வர வேண்டும் என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் விரும்புகின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1974 சனவரி 23]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உங்கள் கேள்வி சாப்பாட்டுக்கு இல்லாது திருடுகின்றார்களா அல்லது சும்மா திருடுகின்றார்களா என்பதுதான். திருடுவது உண்மையா இல்லையா என்பது வேறு. ஆனால் திருடுவதை நீங்கள் ஒப்புக் கொண்டு எதற்காகத் திருடுகின்றார்கள் என்று கேட்கின்றீர்கள்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, is there any international gang behind these thefts, Sir, because we understand that most of the idols go abroad?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, சிலைகள் திருட்டுப் போன சில வழக்குகளில் காவல் துறையினர் ஆய்வு செய்ததில் இங்கே இப்படித் திருடப்படும் சிலைகளைக் கடத்திச் செல்லுவதற்கு ஒரு கூட்டமே இருக்குமோ என்று சந்தேகப்படுகின்றார்கள். இது சம்பந்தமாக மத்திய அரசுடனும் வெளி நாட்டின் அரசுகளுடனும் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கைகளை தற்போது எடுத்து வருகின்றார்கள்.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, கோவில்களிலுள்ள புராதனச் சிலைகளைத் திருடுபவர்களெல்லாம் பிற நாடுகளிலோ அல்லது கலை ஆர்வம் உள்ளவர்களிடத்லோ அவற்றை அதிகப்படியான, பெரும் கொள்ளை விலையைப் பெறலாம் என்ற பேராசையினால்தான் திருடுகின்றார்கள் என்றும் அந்தக் காலத்திலே 500 ரூபாய் அல்லது ஒரு ஆயிரம் ரூபாய்க்குச் செய்யப்பட்ட சிலைகளின் மதிப்பு தற்போது, 'ஆன்டிக்விடி வேல்யு' என்ற முறையில் லட்ச ரூபாய், பத்து லட்ச ரூபாய் என்று இருக்கும் காரணத்தினால்தான் திருடுகின்றார்களேயன்றி திருடுவது கேவலம் வறுமையால் அல்ல என்பதை அரசு உணருமா? உணர்ந்து அதற்குத்தக்க நடவடிக்கைகளை எடுக்க முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது முற்றிலும் உண்மை. ஏற்கெனவே நமது தமிழகத்தில் திருடப்பட்ட ஒரு நடராஜர் சிலை அமெரிக்காவில் பல லட்சம் ரூபாய்க்கு ஒருவரால் வாங்கப்பட்டிருக்கின்றது. அச்சிலை இங்கே செய்யப்பட்ட நேரத்திலே அதனுடைய கிரயம் மிகக் குறைவாகத்தான் இருந்திருக்கும். ஆனால் அது மேலைநாடுகளிலே எடுத்துச்செல்லப்பட்டு அங்கே விற்கப்பட்டால், பல லட்ச ரூபாய் பெறலாம் என்றுதான் திருடப்படுகிறது. இங்கே திருடுகின்றவர்கள் அதைத் திருடி ஒரு பத்தாயிரம் ரூபாய் பெறுவதோடு நின்றுவிடுகின்றார்கள். அது பம்பாயில் ஒரு லட்சம் ரூபாய்க்குப் போகிறது. பின்னர் அங்கிருந்து பிற நாட்டிற்கு கடத்திச் செல்லப்படும்போது, அதன் மதிப்பு லட்சக்கணக்கில்

மாறுகின்றது. பின்னர் வெளி நாட்டிலே அது ஐம்பது லட்சம், அறுபது லட்சம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இருந்தாலும் இவற்றைத் திரும்பப் பெறவும், இங்கே திருடுகிறதைத் தடுப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது. மத்திய அரசுடனும் வெளிநாட்டு அரசோடும் தொடர்பு கொண்டு அங்கே விற்கப்பட்ட நம் சிலைகளை மீட்கும் முயற்சியிலும் தமிழக அரசு ஈடுபட்டு வருகின்றது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இங்கே திருடி அமெரிக்காவிற்குக் கடத்திச்செல்லப்பட்டு அங்கே விற்கப்பட்டுள்ள நமது சிலையை நமது ஐ.ஜி. அவர்கள் 'இண்டர்போல்' என்று சொல்லப்படும் ஸ்தாபனத்தின் உதவியோடு கண்டுபிடித்து கூடிய சீக்கிரம் அது நம்முடைய கைக்கே மீண்டும் வரக்கூடிய நிலை இருக்கின்றது. அதற்காக அகில உலகப் போலீஸோடு கலந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்று பத்திரிகையில் அறிக்கை விட்டார்கள். அது எந்த நிலைமையில் இருக்கின்றது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் இதுபற்றி இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றேன். உடனடியாக இது விஷயத்தில் நடவடிக்கை எடுப்பதாக மத்திய அரசிடமிருந்து தகவல் வந்திருக் கின்றது. இது சம்பந்தமாக அமெரிக்க அரசோடு இந்திய அரசு தொடர்பு கொண்டிருக்கின்றது என்று நான் நம்புகிறேன். மீண்டும் தொடர்பு கொண்டு விரைவில் அதைப் பெறுவதற்கான வழிவகைகளை மத்திய அரசு செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, இந்தப் பழங்காலச் சிலைகளை, சிற்பத் திறன் படைத்த இச்சிலைகளை அவை வைக்கப்பட்டுள்ள கோவில்களிலிருந்து எடுத்துவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் புதிதாக வேறு சிலைகள் அவற்றைப் போலவே செய்யப்பட்டு அங்கே வைக்கப்படுகின்றன என்று தெரிகின்றது. இதைத் தவிர்ப்பதற்காக இப்படிப்பட்ட சிலைகளைச் செய்யும் சிற்பிகளின் பட்டியல் தயாரித்து அவர்கள் சிலைகள் தயாரிப்பதற்கு உரிமம் வழங்கி முறைப்படுத்தப்பட்டால், இப்படிப்பட்ட தவறுகளைத் தடுக்க முடியும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்படிப்பட்ட தவறுகளைச் சிற்பிகள் மட்டும் செய்வதாகச் சொல்ல முடியாது. கோவில்களி லுள்ள குருக்கள்மார்களும் பூசாரிகளும்கூட அதற்கு ஒத்துழைப்பு கொடுக்

கின்றார்கள் என்றே தெரிகின்றது. அதற்காக இந்தக் குருக்கள்மார்களும் பூசாரிகளும், கோவில்களில் தூப தீப நைவேத்தியங்களைச் செய்யும்போது, ஒளி நிறைந்த விளக்குகளை ஏற்றி அச்சிலைகளை ஃபோட்டோ எடுப்பதற்கான வழி முறைகளைக்கூடச் செய்து கொடுக்கின்றார்கள் என்றும் ஃபோட்டோ எடுத்தபிறகு அவைபோன்ற சிலைகளைச் செய்தபிறகு அவை மாற்றப்படுகின்றன என்றும் இப்படிப்பட்ட குற்றங்களைப்பற்றி ஆராயும்போது தகவல்கள் வருகின்றன. ஆகவே சிற்பிகளைக் கட்டுப்படுத்துவதால் மட்டும் போதாது, அர்ச்சகர்களையும் கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்றது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, இப்படி வெளிநாட்டில் ஒரு சிலை ரூபாய் 50 லட்சம், ரூபாய் 60 லட்சம் என்று விற்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது ரூபாய் 50 லட்சத்துக்குப் போகும் சிலையை இங்கே தயாரிப்பதற்கு உத்தேசமாக எவ்வளவு 'காஸ்ட் ப்ரைஸ்' ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தயவுசெய்து இப்படிப்பட்ட லாபநஷ்டக் கணக்கையெல்லாம் இதில் பார்க்க வேண்டாம், அது ஆபத்தானது. அதை ஊக்குவிப்பதுபோலாகிவிடும்.

New Scales of pay to the Temple Staff working in Srirangam Temple.

@ * 14. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased state—

(*a*) whether the Government are aware of the fact that the new scales of pay have not been implemented in the case of the temple staff working in Srirangam Temple; and

(*b*) if so, the action taken thereon by the Government?

@ * 19–1–1974-ம் தேதி வினுப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது